**நடுவர் நீதிமன்றம், பாப்பிரெட்டிபட்டி**

**முன்னிலை : திரு.ஐ.சம்பத்,B.A.,, MSW., LLB.,**

**நீதித்துறை நடுவர் பாப்பிரெட்டிபட்டி**

**2026ஆம் ஆண்டு ஜூன் 04–ம் நாள் வியாழக்கிழமை**

**CC.No. 52/2022**

**C.N.R.No.TNDP130004902022**

அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர்,
அ.பள்ளிப்பட்டி காவல் நிலையம்,
குற்ற எண் : 213/2021 ... குற்றமுறையீட்டாளர்

**/எதிரி/**

A1. செந்தில் த/பெ.ஜடையன்
A2. சீதா க/பெ.செந்தில்
A3. சிபிராஜ் த/பெ செந்தில் ... எதிரிகள்

**வழக்கு விபரம்**

| | | |
|---|---|---|
| 1. | Name of the Court | Judicial Magistrate, Pappireddipatti |
| 2. | Name of the Judge | Thiru.I.Sambath,B.A.,MSW,LLB., |
| 3. | Date of Judgment | 04.06.2026 |
| 4. | Case Number along with CNR Number | CC.No.52/2022<br>C.N.R.No.TNDP130004902022 |
| 5. | Name of the parties of the case | Sub-Inspector of Police, A.Pallipatti<br>Cr.No.213/2021 |
| | | A1. Senthil S/o Jadaiyan<br>A2. Seetha W/o Senthil<br>A3. Sibiraj S/o Senthil |
| 6. | Date of Occurence | 07.08.2021 |
| 7. | Date of Complaint | 07.08.2021 |
| 8. | Date of arrest if any and remand | A1.07.08.2021 |
| 9. | Period of Remand of the Accused | A1- 7 Days |
| 10. | Date if release on bail | A1.13.08.2024 |
| 11. | Date of Final Report | 30.10.2021 |
| 12. | Date of Committal of the case to court of Sessions | -Nil- |

<table>
<tr><td>13.</td><td>Date of Questioning of the accused U/s. 294(b), 323, 506(2) IPC</td><td>09.10.2023</td></tr>
<tr><td>14.</td><td>Date of Examination in Chief and cross examination of the witnesses</td><td><table>
<tr><td>Witnesses</td><td>Chief</td><td>Cross</td></tr>
<tr><td>PW1</td><td>05.05.2025</td><td>05.05.2025</td></tr>
<tr><td>PW2</td><td>05.05.2025</td><td>05.05.2025</td></tr>
<tr><td>PW3</td><td>04.07.2025</td><td>04.07.2025</td></tr>
<tr><td>PW4</td><td>04.07.2025</td><td>04.07.2025</td></tr>
<tr><td>PW5</td><td>06.08.2025</td><td>20.05.2026</td></tr>
<tr><td>PW6</td><td>06.08.2025</td><td>20.05.2026</td></tr>
<tr><td>PW7</td><td>06.08.2025</td><td>20.05.2026</td></tr>
<tr><td>PW8</td><td>01.09.2025</td><td>01.09.2025</td></tr>
<tr><td>PW9</td><td>24.09.2025</td><td>24.09.2025</td></tr>
<tr><td>PW10</td><td>13.10.2025</td><td>13.10.2025</td></tr>
</table></td></tr>
<tr><td>15.</td><td>Date of filing of all miscellaneous petitions and their results including the results on Challenge before the Superior courts except routine petitions like petitions U/S. 317 of code.</td><td>1. A2 - Petition U/s.438 of Cr.pc filed and allowed vide Crl.M.P.No.1280/2021 Dated: 24.08.2021</td></tr>
<tr><td>16.</td><td>Date of Examination of the Accused U/s.313 of the code</td><td>25.05.2026</td></tr>
<tr><td>17.</td><td>Details of the abscondence of an accused and his appearance / production as the case may be</td><td>-Nil-</td></tr>
<tr><td>18.</td><td>Grant of Stay by Superior Courts and the results there of</td><td>-Nil-</td></tr>
<tr><td>19.</td><td>Date of Commencement of Trial</td><td>05.05.2025</td></tr>
<tr><td>20.</td><td>Date of Closure of Trial</td><td>13.10.2025</td></tr>
<tr><td>21.</td><td>Date of Sentence of Order</td><td>04.06.2026</td></tr>
<tr><td>22.</td><td>Date of Service of Copy of Judgment to the Accused</td><td>04.06.2026</td></tr>
<tr><td>23.</td><td>If any delay give Explanation</td><td>-Nil-</td></tr>
</table>

இவ்வழக்கானது 17.06.2022–ம் தேதி அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதி விசாரணைக்காக 04.06.2026–ம் தேதியன்று வந்தபோது குற்றமுறையீட்டாளர் தரப்பில் அரசு வழக்கறிஞர் நிலை–1 செல்வி. V.சண்முகபிரியா,பி.ஏ.,எம்.எல்., அவர்கள் முன்னிலையிலும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திருவாளர்கள் C.குமார்

E.விவேகானந்தன் மற்றும் V.அரவிந்த்கிருஷ்ணா ஆகியோர்களின் முன்னிலையில் வழக்கு ஆவணங்கள் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்த பின்னரும் இருதரப்பு வாதுரைகள் கேட்டறிந்த பின்னரும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

1. கடந்த 03.08.2021 ம் தேதி இரவு 08.00 மணிக்கு சாட்சி 1 உஷாராணி அவரது கணவர் வீட்டில் இருந்தபோது சாட்சி 1 ன் சின்ன மாமனார் எதற்கு என் மனைவியிடம் தோட்டத்தில் சண்டை போட்டீர்கள் என்று கேட்டுக்கொண்டிருந்த போது அங்கு வந்த 2–வது எதிரியானவர் தான் தன்னுடைய சின்ன மாமனாரிடம் பேசிக்கொண்டிருக்கும் போதே தேவடியா, கண்டாரஓலி என்று கெட்ட வார்த்தையால் திட்டியும், மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக 2 வது எதிரியானவர் சாட்சி –1 ன் கணவரின் வயிற்றின் மீது எட்டி உதைத்தும், 1–வது எதிரி அவர் கையால் கண்ணத்தில் மாறிமாறி அடித்தும், 3 வது எதிரி சாட்சி –1 ன் கணவரின் முதுகின் மீது ஓங்கி அடித்தும் சொற்பகாயம் ஏற்படுத்தியும், மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக 1–வது எதிரி கையில் வைத்திருந்த கொடுவாளை காட்டி மீண்டும் நிலப்பிரச்சனையில் தலையிட்டால் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்துள்ள செய்கையினால், 1 முதல் 3 வரையுள்ள எதிரிகள் இ.த.ச பிரிவுகள் 294(b), 323, 506(ii) ன்படி தண்டிக்கதக்க குற்றம் என்று அ.பள்ளிப்பட்டி காவல் உதவி ஆய்வாளர் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இந்நீதிமன்றம் வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்து C.C.No.52/2022 என 17.06.2022–ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டவுடன் எதிரிகளுக்கு இந்நீதிமன்றத்தில் ஆஜராவதற்காக அழைப்பாணை அனுப்பப்பட்டு எதிரிகள் இந்நீதிமன்றத்தில் அழைப்பாணையின் பேரில் ஆஜரானவுடன் அரசு தரப்பு ஆவணங்கள் மற்றும் நகல்கள் அனைத்தும் எதிரிகளுக்கு இலவசமாக கு.வி.மு.ச பிரிவு 207 கீழ் வழங்கப்பட்டு குற்றச்சாட்டுகள் வனைவதற்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

3. எதிரிகளுக்கு போதிய கால அவகாசம் வழங்கப்பட்டபின் வழக்கு ஆவணங்களை கவனத்துடன் பரீசிலனை செய்தபோது எதிரிகள் மீது குற்றச்சாட்டுகள் வனைவதற்கு போதுமான முகாந்திரம் இருந்தபடியால் 1 வது எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 323, 506(2), 294(b) உ/இ.34 இ.த.ச படியும், 2 வது எதிரியின் மீது சட்டப்பிரிவு 294(b), 323, 506(2) உ/இ.34 இ.த.ச படியும், 3 வது எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 294(b) உ/இ.34, 323, 506(2) உ/இ.34 ன் படி குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு குற்றங்களின் தன்மையை எதிரிகளுக்கு படித்து விளக்கி கூறியபோது எதிரிகள் குற்றச்சாட்டுகளை மறுத்து அரசு தரப்பு சாட்சிகளை விசாரிக்க வேண்டும் என கோரியதால் வழக்கானது அரசு தரப்பு சாட்சிகளை விசாரிக்க ஒத்தி வைக்கப்பட்டது.

4.அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.10 ஆகிய சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.6 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. அரசு தரப்பு சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. எதிரி தரப்பில் சாட்சியங்கள், சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5. அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்

(i) **அ.சா.1 உஷாராணி** தனது சாட்சியத்தில் தான் தோழனூரில் வசித்து கொண்டு விவசாய கூலி வேலை செய்து வருகிறேன் என்றும், ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும், 1வது எதிரி தனது சின்னமாமனாரின் மகன் ஆவார் என்றும், 2வது எதிரி 1வது எதியின் மனைவி ஆவார் என்றும், எதிரிகளுக்கும் தங்களுக்கும் இடையில் நிலம் தொடர்பாக தகராறு உள்ளது என்றும், கடந்த 03.08.2021 ம் தேதி இரவு 8 மணியளவில் தானும் தனது கணவர் சேட்டு என்பவரும் வீட்டில் இருந்தபோது தனது சின்னமாமனார் சடையன் என்பவர் தங்கள் வீட்டிற்கு வந்த தனது கணவரிடம் கோயா கொம்மா என்று தகாத வார்த்தைகளால் திட்டினார் என்றும், அவருக்கு பின்னாலேயே அவரது மருமகள் 2வது எதிரி சக்களாத்தி தேவிடியா என்று தன்னை வீட்டிற்கு வெளியில் இருந்து திட்டினார் என்றும், மேலும் தனது வயிற்றில் எட்டி உதைத்தார் என்றும், 1 வது எதிரி செந்தில் தன்னை மாறிமாறி கன்னத்தில் அறைந்தார் என்றும், மேலும் 1வது எதிரியின் மகன் சிபிராஜ் தனது முடியை பிடித்து தன்னை கையால் நெஞ்சின் மீது அடித்தார் என்றும், மேலும் 1 வது எதிரி கையில்

கொடுவாளை வைத்து கொண்டு தங்களை கண்டாரஓலி தேவிடியா என்றும் சொல்லகூடாத வார்த்தைகளால் தன்னை திட்டி கொடுவாளை வைத்துகொண்டு உன்னை வெட்டாமல் விடமாட்டேன் நீ எப்படி வாழ்கிறாய் என மிரட்டினார் என்றும், அடிப்பட்ட தன்னை அருகில் இருந்த தனது கணவர் பாப்பிரெட்டிப்பட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு அழைத்து சென்றார் என்றும், சிகிச்சையில் இருந்தபோது பள்ளிப்பட்டி காவல் நிலைய போலீசார் தன்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், புகார் வாக்குமூலம் அ.சா. ஆ 1 குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், வழக்கு தொடர்ந்த போலீசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(ii) **அ.சா.2 சேட்டு** தனது சாட்சியத்தில் தான் தோழனூரில் வசித்து கொண்டு விவசாய கூலி வேலை செய்து வருகிறேன் என்றும், ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும், 1 வது எதிரி தனது சித்தப்பா மகன் ஆவார் என்றும், 2 வது எதிரி 1 வது எதிரியின் மனைவி ஆவார் என்றும், எதிரிகளுக்கும் தங்களுக்கும் இடையில் நிலதகராறு உள்ளது என்றும், சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் இரவு 8 மணியளவில் தானும் தனது மனைவியும் வீட்டில் இருந்தபோது தனது சித்தப்பா ஜடையன் என்பவர் தகாத வார்த்தைகளால் தனது மனைவியான அ.சா 1 ஐ திட்டினார் என்றும், பின்னர் 2 வது எதிரி சீதா தேவிடியா கண்டாரஓலி என்று தகாத வார்த்தைகளால் திட்டி தனது மனைவியை காலால் எட்டி வயிற்றில் உதைத்தார். என்றும், பின்னர் எதிரியின் மகன் தனது மனைவியான அ.சா 1 ஐ முடியை பிடித்து இழுத்து கையால் முகத்தில் அடித்தார் என்றும், மேலும் 1 வது எதிரி கையில் கொடுவாளை வைத்து கொண்டு இனிமேல் நிலத்து பிரச்சனைக்காக வந்தால் உன்னை கொன்று விடுவேன் வெட்டிவிடுவேன் என மிரட்டினார் என்றும், தனது மனைவி சம்பவயிடத்திலேயே விழுந்துவிட்டார் என்றும், தான் தனது மனைவியான அ.சா 1 ஐ பாப்பிரெட்டிப்பட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து வந்தேன் என்றும், தனது மனைவி சிகிச்சையில் இருந்தபோது பள்ளிப்பட்டி காவல் நியைல போலீசார் விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்றும், வழக்கு

தொடர்ந்த போலீசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(iii) **அ.சா.3சாமிக்கண்ணு** தனது சாட்சியத்தில் தான் தற்போது தோளனூரில் வசித்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன் என்றும், ஆஜர் 1வது எதிரியை தெரியும் என்றும், தனது உறவினர் என்றும், அசா1யை தெரியாது என்றும், இந்த வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், தான் எந்த சம்பவத்தையும் நேரில் பார்க்கவில்லை என்றும், போலிசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(iv) **அ.சா.4வெங்கட்ராமன்** தனது சாட்சியத்தில் தான் தற்போது தோளனூரில் வசித்து கொண்டு தையலராக வேலை செய்து வருகிறேன் என்றும், ஆஜர் 1வது எதிரியை தெரியும் என்றும், தனது உறவினர் என்றும், அசா 1யை தெரியாது என்றும், இந்த வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், தான் எந்த சம்பவத்தையும் நேரில் பார்க்கவில்லை என்றும், போலிசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(v) **அ.சா.5 முத்து** தனது சாட்சியத்தில் தான் தற்போது தோழனூரில் வசித்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன் என்றும், வழக்கின் எதிரிகளை தெரியும் என்றும், அ.சா.1 ஐ தெரியும் என்றும், தனது தாயார் என்றும், கடந்த 3.08.2021 ம் தேதி இரவு சுமார் 8 மணியளவில் தனது சின்னதாத்தா ஜடையன் தனது பெற்றோரிடம் எதற்காக நிலப்பிரச்சனை செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டார் என்றும், அப்போது 2 வது எதிரி தனது தாயாரை பார்த்து தேவிடியா கண்டாரஒலி என்று தகாத வார்த்தையால் திட்டி முடியை பிடித்து இழுத்து கீழே தள்ளி கையால் கண்ணத்தில் அறைந்தார் என்றும், வயிற்றில் காலால் எட்டி உதைத்தார் என்றும், அப்போது 1 வது எதிரி இதேபோல் பிரச்சனை வந்தால் உங்களை கொடுவாளால் வெட்டுவேன் என்றும், கொலை செய்து விடுவேன் என மிரட்டி அ.சா.1 ஐ முடியை பிடித்து ஆட்டி கையால் முதுகில் அடித்து காலால் வயிற்றில் எட்டி உதைத்தார் என்றும், மேலும் எதிரிகளின் மகன் சிபிராஜ் தனது தாயாரை கண்ணத்தில் அறைந்து வயிற்றில் எட்டி உதைத்து காயப்படுத்தினார் என்றும், சம்பவத்தை பார்த்து தான் எதிரிகளை விலக்கிவிட்டேன் என்றும், தனது

தாயாரான அ.சா.1 மயக்கம் வருவதாக கூறியதால் தான் தனது தந்தை அ.சா.2 ன் சேர்ந்து 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து தனது தாயாரை பாப்பிரெட்டிப்பட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு எடுத்து சென்றேன் என்றும், வழக்கு தொடர்ந்த போலிசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(vi) **அ.சா.6 ரவி** தனது சாட்சியத்தில் தான் தற்போது தோழனூரில் வசித்து கொண்டு டெய்லர் வேலை செய்து வருகிறேன் என்றும், சுமார் 3,4 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் வழக்கின் எதிரிகளுக்கும் அ.சா.2க்கும் தகராறு ஏற்பட்டதாக தகவல் தெரிவித்தார்கள் என்றும், தகராறு நடந்த மறுநாள் அ.பள்ளிப்பட்டி காவல் நிலைய போலிசார் வழக்கின் சம்பவயிடத்தை பார்வையிட்டு படம் வரைந்து தன் முன்னிலையில் மகஜர் தயார் செய்தார்கள் என்றும், அந்த மகஜரில் தான் சாட்சியாக கையொப்பம் இட்டேன் என்றும், பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், பார்வை மகஜர் ஆ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், வழக்கு தொடர்ந்த போலிசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(vii) **அ.சா.7 பவித்ரா** தனது சாட்சியத்தில் தான் தற்போது தோழனூரில் வசித்து கொண்டு ஒசூரில் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன் என்றும், கடந்த 03.08.2021 ம் தேதி இரவு 8 மணியளவில் தனது மாமியார் மாமனாரான அ.சா.1,2 வீட்டருகில் இருந்தபோது ஜடையன் அ.சா.1ன் மாமனார் பேசிகொண்டிருந்தபோது 2வது எதிரி சீதா தனது மாமியாரான அ.சா.1 ஐ தகாத வார்த்தைகளால் திட்டி முடியை பிடித்து இழுத்து கண்ணத்தில் அறைந்து காலால் வயிற்றில் எட்டி உதைத்து காயப்படுத்தினார் என்றும், 1 வது எதிரி அ.சா.1 கொடுவாளை காண்பித்து எப்போது இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என மிரட்டி கண்டார ஒலி தேவிடியா என்று தகாத வார்த்தையால் திட்டினார் என்றும், சம்பவத்தின்போது தான் சம்பவயிடத்தில் இருந்தேன் என்றும், சம்பவத்தை பார்த்தேன் என்றும், எதிரிகளின் மகன் சிபி அ.சா.1 ஐ முதுகில் அடித்து காலால் உதைத்து காயப்படுத்தினார் என்றும், அ.சா.1 அங்கேயே மயங்கிவிட்டார் என்றும், பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலம் அ.சா.1 ஐ பாப்பிரெட்டிப்பட்டி அரசு மருத்துவமனைக்கு எடுத்து சென்றார்கள் என்றும், பின்னர் சம்பவம் குறித்து

மறுநாள் சம்பவயிடத்தை அ.பள்ளிப்பட்டி காவல் நிலைய போலிசார் பார்வையிட்டு படம் வரைந்து மகஜர் தயார் செய்தார்கள் என்றும், அந்த மகஜரில் தானும் ரவி என்பவரும் சாட்சியாக கையொப்பம் இட்டோம் என்றும், பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், பார்வை மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், வழக்கு தொடர்ந்த போலிசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(viii) **அ.சா.8 அசோகன் (மருத்துவர்)** தனது சாட்சியத்தில் தான் தற்போது சேலம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் பொது மருத்துவதுறையில் மூத்த மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 04.08.2021 ம் தேதி தான் பாப்பிரெட்டிப்பட்டி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது காலை 11.40 மணியளவில் உஷாராணி க/பெ.சேட்டு என்பவர் சிகிச்சைக்காக வந்திருந்தார் என்றும், அவரை விசாரித்தபோது அவர் தன்னை தெரிந்த ஐந்து நபர்கள் 03.08.2021 ம் தேதி நெஞ்சில் அடித்து காயப்படுத்தியதாக கூறினார் என்றும், அவரை பரிசோதித்தபோது கீழ்கண்ட காயம் தென்பட்டது என்றும், காயம்.1 வலது காலில் 0.5 செ.மீ அளவிலான சிறாய்ப்பு காயம் தென்பட்டது என்றும், அவரை மேல் சிகிச்சைக்காக தருமபுரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரைத்தேன் என்றும், இருதயம் மற்றும் எலும்பு முறிவு நிபுணரை அணுகவேண்டி அறிவுறத்தப்பட்டார் என்றும், ஆனால் மேற்படி நபர் அங்கு சிகிச்சைக்கு செல்லாததால் அவருக்கு ஏற்பட்ட காயம் குறித்து கருத்து வழங்க இயலாது என தெரிவித்தேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் அ.சா.1ன் காயச்சான்றிதழ் தான் வழங்கியதுதான் என்றும், மேற்படி காயப்பட்ட நபர் மேல் சிகிச்சைக்கு எங்கும் செல்லாததால் அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயமாக இருக்க வாய்ப்புள்ளது என்றும், அ.சா.1ன் காயச்சான்றிதழ் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், வழக்கு தொடர்ந்த போலிசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(ix) **அ.சா.9 மனோகரன்** தனது சாட்சியத்தில் தான் அரூர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும் கடந்த 2023 ம் ஆண்டு பணி ஒய்வு பெற்று தற்போது அரூரில் வசித்து வருகிறேன் என்றும், கடந்த 2021 ம்

வருடம் அ.பள்ளிப்பட்டி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக திரு.ராஜேந்திரன் என்பவர் 07.08.2021 ம் வருடம் காலை 10.00 மணியளவில் வழக்கு பதிவு செய்து குற்ற எண் 213/2021 சட்டபிரிவுகள் 294(பி),323,506(2) இதசவாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து முதல் கட்ட விசாரணை முடித்து தொடர் விசாரணைக்காக வழக்கு கோப்பை தனது பார்வைக்கு வைத்தார் என்றும், வழக்கின் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 30.10.2021 ம் தேதி வழக்கின் சம்பவயிடம் சென்று காவல் உதவி ஆய்வாளர் ராஜேந்திரன் விசாரணை செய்த சாட்சிகள் சாமிக்கண்ணு வெங்கட்ராமன், ரவி ஆகியோர்களை மறுவிசாரணை செய்து மறு வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், பின்னர் வழக்கின் காயமடைந்த சாட்சி உஷாராணிக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் அசோகன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், அன்றைய தினமே புகார் வாக்குமூலம் பதிவு செய்த தலைமை காவலர் கண்ணகி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், மேலும் 30.10.2021 ம் தேதி இவ்வழக்கின் எதிரியான சிபிராஜ் த/பெ செந்தில் என்பவர் சம்பவத்தில் ஈடுபடவில்லையென தனது விசாரணையில் தெரியவந்ததால் அவரை எதிரியின் பட்டியலில் இருந்து நீக்கம் செய்து எதிரி நீக்கல் அறிக்கை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பினேன் என்றும், எதிரி நீக்கல் அறிக்கை அ.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், அத்துடன் தனது புலன் விசாரணையை முடித்து எதிரிகள் செந்தில் த/பெ ஜடையன் மற்றும் சீதா க/பெ செந்தில் ஆகியோர் மீது 294(பி),323,506(2) இதச படி 30.10.2021 ம் தேதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றும், தனது விசாரணையில் சாட்சிகள் வாக்குமூலத்தில் உள்ளவாறு சொல்லியுள்ளார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(x) **அ.சா.10 ராஜேந்திரன்** தனது சாட்சியத்தில் தான் தற்போது அதியமான் கோட்டை காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 07.08.2021 ம் தேதி காலை 11.00 மணியளவில் தான் அ.பள்ளிப்பட்டி காவல் நிலையத்தில் அலுவலில் இருந்தபோது பாப்பிரெட்டிப்பட்டி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலின் பேரில் தலைமை காவலர் கண்ணகி அவர்களை அனுப்பி அங்கு உள்நோயாளியாக இருந்த சிகிச்சையில் இருந்த உஷாராணி க/பெ.சேட்டு என்பவர் அளித்த புகார் வாக்குமூலத்தை பெற்று மனு

இரசீது எண்.126/2023 வழங்கியதை பரிசீலனை செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய முகாந்திரம் இருந்தபடியால் நிலைய குற்ற எண் 216/2023 சட்டபிரிவுகள் 294(பி),323,506(2) இதசாபடி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றும், தான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், அன்றைய தினமே பகல் 12.30 மணியளவில் வழக்கின் சம்பவயிடம் சென்று சாட்சிகள் பவித்ரா, ரவி ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன் என்றும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், பார்வை மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்பபட்டுள்ளது என்றும், பின்னர் சாட்சிகள் 1 முதல் 6 வரை உள்ளவர்களை தனிதனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், அன்றைய தினமே பகல் 1.30 மணியளவில் வழக்கின் எதிரி செந்தில் என்பவரை அ.சா.1ன் தோட்டத்தில் கைது செய்து நிலையம் கொண்டு வந்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன் என்றும், அத்துடன் தனது புலன் விசாரணையை முடித்து தொடர் விசாரணைக்காக வழக்கு கோப்பை தனக்கு பின்னால் வந்த காவல் உதவி ஆய்வாளர் மனோகரன் அவர்கள் வசம் ஒப்படைத்தேன் என்றும், தனது விசாரணையில் சாட்சிகள் வாக்குமூலத்தில் உள்ளவாறு சொல்லியுள்ளார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6. இவ்வழக்கில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிகளுக்கு பாதகமான சாட்சிய விவரங்கள் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(b) –ன் படி வினவியபோது எதிரிகள் பொய்சாட்சி என்றும், இந்த வழக்கு பற்றி ஏதவாது சொல்லவேண்டுமா என்று வினவியபோது பொய் வழக்கு என்றும், அவர்கள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லையென்றும் கூறினார்கள்.

7. எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்கள் தங்களுடைய வாதத்தில் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லையென்றும், எதிரிகள் மீது பொய்யாக இந்த வழக்கு போடப்பட்டுள்ளது என்றும், அரசுத்தரப்பில் இந்த வழக்கு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லையென்றும், சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து விடுதலை செய்யவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

**8. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றத்தை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதேயாகும்?**

**9. தீர்வு**

(i) இவ்வழக்கில் அரசு தரப்பில் பாதிக்கப்பட்ட சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.1 தனது சாட்சியத்தில் எதிரிகளுக்கும் தங்களுக்குமிடையே நிலம் சம்பந்தமாக பிரச்சனைகள் இருந்து வருகிறது என்றும், கடந்த 03.08.2021 ம் தேதி இரவு 8.00 மணியளவில் தானும் தனது கணவர் சேட்டு என்பவரும் வீட்டில் இருந்தபோது தனது சின்ன மாமானார் ஜடையன் என்பவர் தங்கள் வீட்டிற்கு வந்து தனது கணவரிடம் கோயா கொம்மா என்று தகாத வார்த்தைகளால் திட்டினார் என்றும், அவருக்கு பின்னாலேயே அவரது மருமகள் 2–வது எதிரி சாக்காலத்தி தேவடியா என்று தன்னை வீட்டிற்கு வெளியிலிருந்து திட்டினார் என்றும், மேலும் தனது வயிற்றில் எட்டி உதைத்தார் என்றும், 1–வது எதிரி செந்தில் தன்னை மாறிமாறி கண்ணத்தில் அறைந்தார் என்றும், மேலும் 1–வது எதிரியின் மகன் சிபிராஜ் தனது முடியை பிடித்து தன்னை கையால் நெஞ்சின் மீது அடித்தார் என்றும், மேலும் 1–வது எதிரி கையில் கொடுவாளை வைத்துக்கொண்டு தங்களை கண்டாரஓலி தேவடியா என்று சொல்லக்கூடாதா வார்த்தைகளால் தன்னை திட்டி கொடுவாளை வைத்துக்கொண்டு உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என மிரட்டினார் என்று கூறி சாட்சியமளித்துள்ளார். மேலும் தனது குறுக்கு விசாரணையில் புகார் வாக்குமூலத்தில் இரண்டு மூன்று கையெழுத்து போட்டியிருப்பேனா என்றால் சரிதான் என்றும், தான் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சென்றபோது தன்னை மூன்று நபர்கள் தாக்கியதாக மருத்துவரிடம் கூறினேன் என்றும், தான் இரண்டு நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன் என்றும், மருத்துவர் தன்னை வீட்டிற்கு செல்லலாம் என்று கூறிய பிறகுதான் வீட்டிற்கு சென்றேன் என்றும் கூறி சாட்சியமளித்துள்ளார். ஆனால் அ.சா 8 மருத்துவர் தனது சாட்சியத்தில் அ.சா.1 ற்கு வலது காலில் 0.5 செ.மீ அளவிலான சீராய்ப்பு காயம் மட்டுமே தென்பட்டதாகவும் கூறி சாட்சியமளித்துள்ளார். மேற்கண்ட அ.சா 1 ன் சாட்சியத்தையும் அ.சா 1 ற்கு சிகிச்சை அளித்த மருத்துவர் அ.சா 8 ன் சாட்சியத்தையும் கூர்ந்து கவனிக்கும்போது

அ.சா.1 ற்கு ஏற்பட்டதாக சொல்லப்படும் காயத்தின் தன்மையும், அ.சா 8 தனது சாட்சியத்தில் கூறியுள்ள காயத்தின் தன்மையும் வெவ்வேறாக உள்ளது என்பது தெரிய வருகிறது.

(ii) இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா 2 சேட்டு தனது மனைவி அ.சா.1 உஷாராணி அளித்த சாட்சியத்தையே அனுசரித்து சாட்சியமளித்துள்ளார். மேலும் தனது குறுக்கு விசாரணையில் அ.சா.1 ஐ சம்பவத்தன்று இரவு 8.30 மணியளவில் மருத்துவமனையில் சேர்த்தாக கூறுகிறார். ஆனால் இவ்வழக்கில் அ.சா 8 ஆக விசாரிக்கப்பட்டுள்ள மருத்துவர் 04.08.2021 ம் தேதி காலை 11.40 மணியளவில் அ.சா.1 மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்ததாக கூறி சாட்சியமளித்துள்ளார்.

(iii) இவ்வழக்கில் மேலும் கண்ணுற்ற சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.5 சம்பவசமயத்தில் தான் வீட்டின் உள்ளேயிருந்து வந்தேன் என்றும், அ.சா.3 மற்றும் அ.சா.4 ஆகியோர்கள் தாங்கள் எந்த சம்பவத்தையும் நேரில் பார்க்கவில்லை என்று கூறி பிறழ்சாட்சிகளாக மாறி சாட்சியமளித்துள்ளார்கள்.

(iv) இவ்வழக்கில் பார்வை மகஜர் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.6 ரவி தான் கையெழுத்து போட்ட பார்வை மகஜரில் என்ன எழுதியிருந்தது என்று தனக்கு ஞாபகமில்லை என்றும், போலிஸார் தன்னிடம் எந்த வாக்குமூலத்தையும் பதிவு செய்யவில்லை என்றும் தனது குறுக்கு விசாரணையில் கூறி தனது போலிஸார் விசாரணை மற்றும் முதல் விசாரணை ஆகியவற்றிலிருந்து மாறுபட்டு கூறி சாட்சியமளித்துள்ளார். எனவே பார்வை மகஜர் அ.சா.6 ன் முன்னிலையில்தான்ஏற்படுத்தப்பட்டது என்பதை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

(v) இவ்வழக்கில் அ.சா 9 மற்றும் அ.சா.10 ஆக விசாரிக்கப்பட்டுள்ள மனோகரன் மற்றும் ராஜேந்திரன் ஆகியோர்கள் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரிகள் ஆவார்கள். அ.சா 9 மற்றும் அ.சா.10 ஆகியோர்கள் தங்களது சாட்சியத்தில் தாங்கள் செய்த புலன் விசாரணையை அனுசரித்து சாட்சியம் அளித்துள்ளார்கள். ஆனால் இவ்வழக்கின் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள அ.சா 1 முதல் அ.சா 8 வரை உள்ளவர்கள் புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை அனுசரித்து சாட்சியம்

அளிக்கவில்லை. எனவே எதிரிகள் அ.சா.1 ஐ அசிங்கமாக பேசி கண்ணத்தில் மாறிமாறி அடித்து கொலை மிரட்டல் விடுத்ததாக சொல்லப்படும் குற்றச்சாட்டுகளை பொறுத்து அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூப்பிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

10. இறுதியாக, 1 வது எதிரியின் மீது சுமத்தப்பட்ட பிரிவுகள் 323, 506(2), 294(b) உ/இ.34 இ.த.ச படியும், 2 வது எதிரியின் மீது சுமத்தப்பட்ட சட்டப்பிரிவு 294(b), 323, 506(2) உ/இ.34 இ.த.ச படியும், 3 வது எதிரியின் மீது சுமத்தப்பட்ட பிரிவுகள் 294(b) உ/இ.34, 323, 506(2) உ/இ.34 ன் படியான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து, 1 முதல் 3 வரையுள்ள எதிரிகளை கு.வி.மு.ச. 248 (1) வது பிரிவின்கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கிறது.

11. இந்த வழக்கில் சொத்துக்கள் ஏதும் கைப்பற்றி தாக்கல் செய்யவில்லை எனவே சொத்துக்கள் குறித்து உத்தரவு எதுவும் இல்லை.

12. எதிரிகள் எழுதிக்கொடுத்துள்ள பிணை பத்திரத்தை மேல் முறையீட்டு காலத்திற்கு பின் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு ஜுன் மாதம் – 04 ம் தேதி அவையறிய பகரப்பட்டது.

I SAMBATH — Digitally signed by I SAMBATH Date: 2026.06.04 17:08:16 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பாப்பிரெட்டிப்பட்டி.**

<u>**அரசு தரப்பு சாட்சிகள்**</u>

அ.சா.1 – உஷாராணி
அ.சா.2 – சேட்டு
அ.சா.3 – சாமிக்கண்ணு
அ.சா.4 – வெங்கட்ராமன்
அ.சா.5 – முத்து

அ.சா.6 – ரவி

அ.சா.7 – பவித்ரா

அ.சா.8 – அசோகன் (மருத்துவர்)

அ.சா.9 – மனோகரன்

அ.சா.10 – ராஜேந்திரன்

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>**

**<u>Judicial Form. 68</u>**

| Sl.No. | Description to the exhibits and its date | Date when the exhibit was filed in the case | How Marked | By whom filed | Remarks |
|---|---|---|---|---|---|
| 1. | புகார் வாக்குமூலம் | 05.05.2025 | அ.த.சா.ஆ.1 | அ.சா.1 | அசல் |
| 2. | பார்வை மகஜர் | 06.08.2025 | அ.த.சா.ஆ.2 | அ.சா .6 | அசல் |
| 3. | அ.சா.1 ன் காயச்சான்றிதழ் | 01.09.2025 | அ.த.சா.ஆ.3 | அ.சா .8 | அசல் |
| 4. | எதிரி நீக்கல் அறிக்கை | 24.09.2025 | அ.த.சா.ஆ.4 | அ.சா .9 | அசல் |
| 5. | முதல் தகவல் அறிக்கை | 13.10.2025 | அ.த.சா.ஆ.5 | அ.சா .10 | அசல் |
| 6. | மாதிரி வரைபடம் | 13.10.2025 | அ.த.சா.ஆ.6 | அ.சா .10 | அசல் |

**<u>அரசு தரப்பு சான்று பொருள்</u>**:– இல்லை

**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள்</u>**:– இல்லை

I SAMBATH Digitally signed by I SAMBATH Date: 2026.06.04 17:08:27 +0530

**நீதித்துறை நடுவர்,**

**பாப்பிரெட்டிப்பட்டி.**

<u>குறிப்பு</u> :

1. வழக்கின் முடிவு பற்றி காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
2. எந்த ஒரு சாட்சியும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைத்து விசாரிக்கப்படவில்லை.
3. வழக்கு விசாரணையின் போது எதிரிகள் பிணையில் இருந்தனர்.